Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா 4-00

# முஸ்லிம் காங்கிரஸ்
مسلم كنگرس
MUSLIM CONGRESS

அல்லாஹ்வின் ஒற்றுமையெனும் கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்துவிடாதீர்கள் (அல்-குர்ஆன்)

மலர் 5 ★ ஜ அல்வல் - ஜ ஆகிர் ஹிஜ்ரி 1410 ★ டிசம்பர் 1989 ★ இதழ் 3

நிருபர் தேவை

முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைக்கு நாடளாவிய ரீதியில் நிருபர்கள் தேவைப்படுகிறார்கள். தமிழ் மொழியில் ஆற்றலும், எழுத்துத்திறனும் உடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். (ஆங்கில அறிவு மேலதிக தகைமை) தொடர்பு:

EDITOR
MUSLIM CONGRESS
375/2 DAM STREET
COLOMBO - 12

## பாண்டிருப்பில்

# 12 முஸ்லிம்கள் படுகொலை!

# புதைகுழியிலிருந்து சடலங்களும் மீட்பு!

## அட்டாளைச்சேனை திரும்பும் வழியில் இந்த அனர்த்தம்

பாண்டிருப்பு இந்து மயானத்திற்கருகில் 12 முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து கடந்த 9த் திகதி அவையாவும் தோண்டியெடுக்கப்பட்டன. அட்டாளைச்சேனை வாசிகளான இவர்கள் 12 பேரும் ஊர் திரும்பும் வழியில், பாண்டிருப்பில் வைத்து தமிழ் ஆயுதக் கோஷ்டியொன்றினால் வழிமறித்து கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

படுகொலைக்குள்ளான எல்லாரும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவர்கள். திருகோணமலை சென்று பிரஜைகள் தொண்டர் படையில் சேர்ந்திருந்த தங்களது மகன்மார் 7 பேரையும், பேரன் ஒருவரையும் அழைத்துக்கொண்டு அட்டாளைச்சேனை திரும்பும் வழியில் இச்சம்பவம், பாண்டிருப்பில் நடைபெற்றது.

கிழக்கில் பல இடங்களில் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து எட்டு இளைஞர்களின் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை மீட்டுவர கடந்த மாதம் 26ந் திகதி திருகோணமலை சென்றனர்.

அங்கிருந்து தமது பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளையுடனும் (பேரப்பிள்ளையை கூட்டிவரச் சென்றவர் 60 வயதுடைய பக்கீர் தம்பி கலந்தர் உம்மா என்ற மூதாட்டி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) ஏறுவூர் வந்தனர், வழிச்செலவுக்கு பணமில்லாததால் ஏறுவூரில் அன்றிரவு தங்கி, ஏறுவூர்வாசி ஒருவரிடம் 500 ரூபா பணம்பெற்றுக் கொண்டு அட்டாளைச்சேனைக்குப் புறப்பட்டனர், வழியில் பாண்டிருப்பில் வைத்து அவர்கள் வாகனத்திலிருந்து ஆயுதக்குழுக்களால் கீழிறக்கப்பட்டு, கடத்திச் செல்லப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் உடல்கள் மூன்று குழிகளில் புதைக்கப்பட்டிருந்தன.

இத்தகவல்களை அறிந்த இவர்களின் உறவினர்கள் அட்டாளைச்சேனையிலிருந்து பாண்டிருப்பு வந்து அவ்வுடல்களைப் புதைகுழியிலிருந்து தோண்டியெடுத்து, லொறியொன்றின் மூலம் தமது ஊருக்குக்கொண்டுவந்தனர். பின்னர் இஸ்லாமிய முறைப்படி அந்த 12 ஜனாஸாக்களும் மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்டன.

### கலிமாச் சொன்ன ஒரே குற்றத்திற்காகவா முஸ்லிம்களுக்கு முடிவில்லாத இந்தப் படுகொலைத் தண்டனை?

படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு:-

இப்றுலெப்பை சீனி முஹம்மது (55வயது.) சீனி முஹம்மது நவாஸ் (21 வயது) ஐ. சி. செய்யது முஹம்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஈ. பீ. ஆர். எல். எப்.-விடுதலைப் புலிகள் உள்ளடங்கிய அரசாங்கமே

# தற்போதைய பிரச்சினைக்கு பரிகாரமாகும்!

இந்திய அமைதிப்படை விலகலோடு போட்டித் தமிழ் போராளிக் குழுக்கள் மோத ஆரம்பித்துள்ளன. இக்குழுக்களில் அங்கம் வகிக்கும் தமிழ் இளைஞர்கள் தினமும் கொல்லப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே தமிழர் சமூகம் அடைந்துள்ள இழப்புகள் மேலும் இரட்டிப்பாக அதிகரித்து வருகின்றன.

போட்டித் தமிழ்க் குழுக்களில் நிராயுதபாணிகளான அப்பாவி முஸ்லிம்கள் பலியாகி வருகின்றனர். முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையை சகல தமிழ்க் குழுக்களும் பூரணமாய் இழந்து வருகின்றன.

தமிழ்க்குழுக்களை மோதவிட்டுப் பலஹீனப் படுத்தி எஞ்சும் தமிழ்க் குழுவோடு இலகுவாகக் கணக்கை தீர்த்துக் கொள்ள சிறுபான்மைச் சமூகவிரோத சக்திகள் தயாராகக் காத்திருக்கின்றன. தமிழர் சமூகத்தின் மீது முஸ்லிம் சமூகத்திற்கு தீராத பகையை வளர்த்துவிட இத்தீய சக்திகள் திரைமறைவில் சதித்திட்டம் தீட்டியுள்ளன.

பாரம்பரிய வாழிடத்தில் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் சிங்களப் படையைக்கொண்டு மேலாதிக்கம் செலுத்த இனவாதிகள் கவனமாக செயற்பட்டு வருகின்றனர்.

**இத்தகைய கூட்டரசாங்கத்தின் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் வட-கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 17 உறுப்பினர்களும் அந்த சபையில் செயற்பட்டு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளுக்கு தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு இருப்பார்கள்.**

வடக்கு-கிழக்குக்குரிய அதிகாரப் பரவலாக்கத்தைக் கொச்சைப் படுத்தி, தமிழர் சமூகத்தின் உரிமைப் போராட்டத்தை அர்த்தமற்ற தாக்கி, தமிழ் [illegible] மாகாண சபையைப் பலப்படுத்த

தமிழ் ஈழத்திற்கான போராட்டம் தமிழ் மகாணசபை ஒன்றைப் பெறுமளவிலாவது முடிந்திருக்கும் இவ்வேளையில் - அந்தத் தமிழ் [illegible] முயற்சி செய்வதே தமிழ்க்குழுக்களின் உணர்வாக இருக்கவேண்டும். அதைவிடுத்து அதிகாரத்துக்கான போட்டியில்போட்டித் தமிழ்க் குழுக்கள் ஈடுபட்டிருப்பது தமிழ் மாகாண சபையையும் கானலாக்கிவிடும். இதனால் இப்பிரதேசத்து தமிழர் சமூகம் பெரும் இன்னல்களை எதிர்நோக்க வரும்.

ஆதலால் இந்த மாகாணசபைக்கான அதிகாரப்போட்டியில் அர்த்தமற்ற யுத்தங்களைச் செய்வதைப் போட்டித் தமிழ்க் குழுக்கள் தவிர்த்து ஆக்க பூர்வமான வழிகளில் செயற்பட முன்வர வேண்டும்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ்

375/2, டாம் வீதி, கொழும்பு-12 தொலைபேசி: 431711

# "போட்டித் தமிழ்ப் போராளிக் குழுக்கள் போரை நிறுத்திப் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும்"

வடக்கு, கிழக்கு மாகாணங்களை நரபலிக் காடாக்கிக் கொண்டிருக்கும் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமது அர்த்தமற்ற போரை நிறுத்தி பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும்.

இவர்கள் தமது போரை நிறுத்தாவிட்டால் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இப் போரை நிறுத்த எழுச்சி கொள்ள வேண்டும். மக்கள் எழுச்சியினுல் தான் இந்த விவஸ்தை கெட்ட போரை நிறுத்த முடியுமென்ருல் தமிழ் பேசும் பிராந்தியத்திலுள்ள அனைத்து புத்திஜீவிகளும், சமூகப் பற்றுள்ளவர்களும், மனித நேயம் கொண்டவர்களும் இப் போரை நிறுத்துவதற்கு தமது உயிர்களையும், உடைமைகளையும் தியாகிக்கத் தயாராக வேண்டும்.

விடுதலைப் புலிகளினதும், தமிழ் தேசிய இராணுவத்தினதும் இந்த முட்டாள்தனமான மோதல்களால் தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் இறந்துள்ளனர். இன்னும் ஆயிரக்கணக்கில் இறப்பதற்குள்ளனர். இதனுல் இலாபம் அடையப் போகிறவர்கள் நிச்சயம் தமிழர்களல்ல.

பேரினவாதத்திற்கெதிராக ஆயுதப் போராட்டத்தை அவசியமாக்கிக் கொண்ட தமிழ் இளைஞர்கள் இன்று தமக்கிடையிலான அதிகாரப் போராட்டத்திற்காக தமது ஆயுதங்களைத் திசை திருப்பியுள்ளது வெட்கக்கேடான விஷயமாகும்.

இந்த இரு சாராருக்கும் பின்னணியில் இருந்து காயை நகர்த்திக் கொண்டிருக்கும் சக்திகளின் அந்தரங்கத்தை அறியாது அதிகாரத்தில் தொடர்ந்து தாம் இருக்க வேண்டுமென்றே அல்லது அதிகாரத்தை தாம் அடைய வேண்டுமென்றே போட்டித் தமிழ் போராளிக் குழுக்கள் செயற்படுவது அருவருக்கத்தக்க விஷயமாகும்.

இந்தப் பிரகடனிக்காப் போரினுல் இரு புறத்து போராளி இளைஞர்களும் அழிவது நிச்சயம். முடிவில் எஞ்சி இருக்கும் போராளிகள் பலமிழந்து போவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து தமிழர் எழுச்சியை நிர்மூலமாக்கி வேரோடு களைந்தெறிய பேரினவாத சக்திகள் சதித்திட்டம் தீட்டியுள்ளன. இவ்வாருன ஒரு நிலைமை ஏற்படுமாகுல் தமிழர்கள் அடையச் சாத்தியமான அதிகாரங்களைக் கூட இழந்துவிடுவர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்து விடுவதன் மூலமோ அல்லது அதனை இயக்கமற்று வைப்பதன் மூலமோ தமிழர்களின் உரிமைகளை இன்னும் அதிகமாகப் பெற்றுவிடலாம் என்று விடுதலைப்புலிகள் நினைக்குமானுல் நிச்சயம் அது தப்புக்கணக்காகத்தான் போகும்.

மாகாண சபையைக் கலைத்து விடுவதற்கோ, இயங்காமற் செய்து விடுவதற்கோ கங்கணம் கட்டியுள்ள விடுதலைப் புலிகளை அடியோடு அழித்துவிட ஈ. பீ. ஆர். எல். எப். அரசாங்கம் நினைக்குமானுல் நிச்சயம் அதுவும் கூட மாபெரும் தப்புக்கணக்காகத் தான் போய்விடும்.

மேலும் வட-கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் சமூகத்தின் நல்லெண்ணத்தை எந்தத் தமிழ் குழுவும் பெறப்போவதில்லை என்பதை நடந்த, நடக்கின்ற சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

இன்று முஸ்லிம்களுடன் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் முஸ்லிம் விரோத வரலாறுகளும் சமகாலத்தில் கருக்கொண்டுள்ள திட்டங்களும் ஒன்றும் மறந்துவிட்ட பாடங்களல்ல.

மூதூர், கிண்ணியா, ஓட்டமாவடி, காத்தான்குடி, கல்முனை போன்ற முஸ்லிம் கிராமங்களின் மீது விடுதலைப்புலிகளின் எதேச்சாதிகாரப் படையெடுப்பு முஸ்லிம்கள் மனதில் ஆருமல் உள்ள புண்களாகும். அதே போல ஈ. என். டீ. எல். எப்., ரெலோ, ஈ. பீ. ஆர். எல். எப்., புளொட் போன்ற தமிழ்ப் பயங்கரவாதக் குழுக்கள் இன்றுவரை முஸ்லிம்கள் மீது நடாத்திவரும் மிருகத்தனமாக கொலைகளும், கொள்ளைகளும் மேற்சொன்ன இயக்கங்கள் மீது முஸ்லிம்களுக்கு ஒரு சத வீத நம்பிக்கையையும் ஏற்படுத்தாது. அதனுல் போட்டித் தமிழ் பயங்கரவாதக் குழுக்களை முஸ்லிம்கள் நம்பத் தயாரில்லை.

மேலும் கிழக்கிலுள்ள சிங்களவர்கள் எந்தத் தமிழ்க் குழுவையும் ஆதரிக்கப் போவதில்லை. இன்று விடுதலைப்புலிகளுடன் வெண்ணெய் பூசிய கையை இலங்கை அரசாங்கம் கோர்த்துக் கொண்டிருப்பதற்காக கிழக்கின் சிங்கள மக்கள் இவற்றை ஆதரிக்கப் போவதில்லை. இந்த உண்மைகளெல்லாம் வடக்கு - கிழக்கின் தற்காலிக இணைப்பை தற்காலிகமாவே ஆக்கி விடும்.

போட்டித் தமிழ்ப் போராளிக் குழுக்கள் இவற்றை உணர்ந்து நடந்து கொள்ளாவிட்டால், தமிழ் மாநிலம் மாகாணங்களாகப் பிரிவது மட்டுமல்ல; வடக்கில் கூட தமிழர்களின் ஆட்சி நிரந்தரமற்றதாகப் போய்விடும்.

ஆதலால் ஏறத்தாழ கடந்த இரு தசாப்தங்களாக பெரும் உயிர், உடைமை இழப்புகளை அனுபவித்துள்ள தமிழர் சமூகத்தின் நிரந்தர அமைதியையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இந்தப் போட்டித் தமிழ்க் குழுக்கள் தமது போரை உடனே நிறுத்தி பேச்சுவார்த்தைகளில் இறங்க வேண்டும். அந்நியரை நம்புவதைவிட தம்மவரையே நம்பிச் செயற்பட இந்த போராளிக் குழுக்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

இவ்வாருன மனித நேயத்தின் அடிப்படையிலான ஒரு நல்ல பணிக்கு உதவ முஸ்லிம் காங்கிரஸ் என்றும் தயாராக இருக்கிறது.

முஸ்லிம்களுக்கு இந்த தமிழ் இயக்கங்கள் செய்துவரும் அநியாயங்களுக்குப் பழி வாங்க இந்த விவேகமற்ற போரை அனுமதிக்கும் சில்லரைப் புத்தி முஸ்லிம்களுக்குக் கிடையாது என்பதையும் இந்த தமிழ் இயக்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## பாண்டிருப்பில் .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மது இலியாஸ் (22 வயது.) பக்கீர் தம்பி கலந்தர் உம்மா (60 வயது) எஸ். சீ. கபூர் (18 வயது,) எஸ். சீ. அக்பர் (21 வயது.) ஐ. எல். குத்தூஸ் (45 வயது,) குத்தூஸ் தவ்பீக் (22 வயது,) ரசீத் நஸீம் (22 வயது) சரீபு ஐதரூஸ் (24 வயது.) வெள்ளைத் தம்பி இல்முதீன் (20 வயது) ஐ.எல்.செய்யது அகமது (60வயது)

காலத்துக்கு காலம் கிழக்கிழங்கை முஸ்லிம்களுக்கெதிராக காட்டுமிராண்டித்தனமான முறையில் கட்டவிழ்த்து விடப்படப்படும் இவ்வாருன ஈனச் செயல்களுக்கான பின்னணியில் இருப்போரின் உள் நோக்கம் என்ன? கிழக்கிழங்கை முஸ்லிம் மக்களை இவ்வாறு திட்டமிட்டு அழிப்பதன் நோக்கம் தான் என்ன?

முஸ்லிம்கள் செய்த பாவம்தான் என்ன? அவர்கள் ''லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலில்லாஹி'' என்று கலிமாச் சொல்லி உருவான சமூகத்தில் பிறந்த ஒரே குற்றத்திற்காகவா இவ்வாறு படு கொலைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், கற்பழிப்புக்களுக்கும் ஆளாகின்ருர்கள்? கிழக்கிலிருந்து முஸ்லிம்களை வேரோடு பிடுங்கி எறியவேண்டும் - கிழக்கின் மண்ணிலிருந்து அவர்களைத் துரத்தியடிக்க வேண்டும் என்பதற்காகவா அவர்களது உடமைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன? பொருளாதாரம் சேதமாக்கப்படுகின்றது?

முஸ்லிம்கள் தமிழ்ச் சகோதரர்களுக்கு என்ன தீங்கிழைத்தார்கள்? அவர்களின் சொத்துக்களை அபகரித்தார்களா? கொள்ளையடித்தார்களா? அல்லது காட்டிக் கொடுக்கும் எட்டப்பர் கூட்டமாக மாறி, தமிழ்க் குழுக்களின் ஆயுதப் போராட்ட வடிவங்களையோ ஆயுத குழுக்களையோ துரோகஞ் செய்து காட்டித்தான் கொடுத்தார்களா?

ஏன் இந்த நபுஞ்சகத்தனம்? முஸ்லிம்கள் வாயில்லாப் பூச்சிகள், குட்டக்குட்டக்குனிந்து கொண்டிருப்பவர்கள், தமது சுயபாதுகாப்புக்காக ஆயுதங்களோ ஆகக் குறைந்தது பாண் வெட்டும் கத்திகள் கூட இல்லாத ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் - என்பதற்காகவா இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற இந்த அநீதியான தாக்குதல்கள், படுகொலைகள்? அரசியல் அனுதைகள் என்பதற்காவா இந்த அட்டூழியங்கள்?

முஸ்லிம்கள் நாசத்தையல்ல, நேசத்தையே என்றும் விரும்புவார்கள் என்பதை ஆயுதந்தரித்த தமிழ்க் குழுக்கள் உணரவேண்டும். பல்லாண்டு காலமாக வடக்கிலுள்ள தமிழ் மக்களுடனும், வடகிழக்கு வெளியேயுள்ள சிங்கள மக்களுடனும், சகோரத்துவத்துடனும், மனித நேயத்துடனும் வாழ்ந்து காட்டி இந்த நாட்டில் சரித்திரத்தை உருவாக்கியவர்கள் என்பதை உணர வேண்டும்.

அதே வேளையில், தொடர்ந்தும் தாக்குதல்களுக்கும், அட்டூழியங்களுக்கும் இலக்காகி வரும் இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் - குறிப்பாக வட-கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகம் - அதிலும் குறிப்பாக கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகம், தொடர்ந்தும் இவ்வாறு வேதனையிலும், சோதனையிலும் வெந்து செத்துக் கொண்டிருக்கும் என்று எவரும் எண்ணிவிட வேண்டாம்.

அடக்கப்பட்ட ஒரு சமூகம், வீறுகொண்டெழுந்தால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை உலக வரலாறும் ஏன், நமது நாட்டு வரலாறும் சான்று கூறிக் கொண்டிருப்பதை உணர வேண்டும். ஒரு சமூகத்தின் உரிமைகளை - அதன் நியாயமான போராட்டத்தை ஆயுதங்களால் அடக்கியாள முடியாது என்பது சமகாலப்பகுதியில் கூட நாம காண்கின்ற அனுபவமாகும்.

சிங்கள பேரினவாதத்திஞல் நசுக்குண்ட சிறுபான்மை தமிழினம் எவ்வாறு வெகுண்டெழுந்து ஆயுதந் தூக்கியதோ - அவ்வாறே தமிழ்ப் பேரினவாதத்திஞல் மூன்ருவது சிறுபான்மைச் சமூகமான இஸ்லாமிய சமூகம் நசுக்கப்படுமாயின் எதிர் காலத்தில் தமது உரிமைகளை ஆயுதம் ஏந்திப் போராடித்தான் வென்றெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை - முஸ்லிம்களை அழித்தொழிக்க நினைக்கின்ற ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள் உணர வேண்டும்.

வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் தமிழர் -- முஸ்லிமகளுக்கிடையே நட்புணர்வும், சகோதர வாஞ்சையும் பரஸ்பர நல்லெண்ணமும் இல்லாவிட்டால் - இப் பிராந்தியத்தில் அமைதியை நிரந்தரமாகத் தேடிக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் என்பதை அராஜகம் செய்யும் தமிழ் குழுக்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

## அடுத்த இதழ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வருடாந்த தேசிய மகாநாட்டை முன்னிட்டு விசேட இதழாக வெளிவர இருக்கிறது.

## ஈ. பீ. ஆர். எல். எப். .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் ஆட்சியை ஈழ மக்கள் விடுதலை முன்னணியும், விடுதலைப்புலிகளும் ஏனைய தமிழ்க் குழுக்களும் ஒன்று சேர்ந்து பொறுப்பேற்க வேண்டும். தமிழ் தேசிய அரசாங்கம் ஒன்றை அனைத்து தமிழ் போராளிக்குழுக்களும் வடக்கு - கிழக்கில் அமைத்து இந்தத் தமிழ் பேசும் பிராந்தியத்தில் உடனடி அமைதியையும் சமாதானத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

மாகாண சபையின் முதலமைச்சர் பதவியைக் கூட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், விடுதலைப்புலிகளும் தகுந்த ஏற்பாட்டின் பேரில் மாறி மாறி ஏற்றுக்கொள்ள முடியும்.

அத்தோடு மாகாணசபையின் அமைச்சர் பதவிகளும், தவிசாளர் பதவிகளும், செயலாளர்கள் பதவிகளும், ஏனைய நியமனங்களும், பாதுகாப்புப் படைகளும் கூட தமிழ் தேசிய அரசாங்கத்தின் கூட்டிணக்கத்தின் பேரில் மீளமைக்கப்பட முடியும். இதற்கான முழு ஒத்துழைப்பையும் முஸ்லிம் காங்கிரஸ் வழங்கத் தயாராக உள்ளது.

இதற்கு மாற்றமான எந்தசெயற்பாடும் தமிழ் பேசும் பிராந்தியத்தின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் பங்கம் விளைக்கவே செய்யும். இதனைக் கருத்திலெடுத்து போட்டித் தமிழ்க்குழுக்கள் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி அவசரத் தீர்மானத்திற்கு அரசு வந்து விடக்கூடாது!

## பாராளுமன்றத்தில் ஹிஸ்புல்லாஹ்

'இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் தேசிய இராணுவத்துக்குமிடையே ஏற்பட்டுள்ள மோதல் வடக்கு கிழக்கை தனி நாடாக்கும் முயற்சிக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்துவிடும் முயற்சிக்குமிடையிலான ஒரு பயங்கரப் போராகவே கருதலாம். இந்தப் போர் உக்கிரப்பட்டால் வடக்கு கிழக்கு மீண்டும் ஒரு நரபலிக் களமாகத்தான் மாறப் போகின்றது. என மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜனுப் எம். எல். எம். ஏ. ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றத்தில் கூறினர்.

கிழக்கின் நிலைமைகளைப் பற்றிய தவருன கணக்கெடுப்பிற்கு இலங்கையை வழி நடத்திவிடக் கூடாது.

வடக்கு - கிழக்கு இணைப்பைப் பற்றிய அவசரத் தீர்மானத்துக்கு அரசு வந்துவிடக் கூடாது. வடக்கு கிழக்கு மாகாண சபையை முறியடிப்பதற்கான வழிகளைத் தேடுவதில் இலங்கை அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக ஆர்வம் காட்டக் கூடாது. இந்திய அமைதிப் படைகளை வாபஸ் பெறச் செய்வதில் இலங்கை காட்டுகின்ற ஆர்வம் அது கடைப்பிடிக்கின்ற வழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

**முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை மூடி மறைப்பதற்காக முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம் சமூகத்தைப் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.**

வரவு - செலவு திட்ட உரை மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்,

தொடர்ந்து பேசிய ஜனுப் ஹிஸ்புல்லாஹ் கூறியதவாது:-

இலங்கை இராணுவத்துக்கும், தமிழ்த் தேசிய இராணுவத்துக்கும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல்கள் முடுக்கிவிடப்பட்டன. பின்னணியில் மக்கள் விரோத சக்திகள் காய்களை நகர்த்தின. 'யார் பலவான்' என்ற போட்டி பலப்படுத்தப்பட்டது. இது குறுகிய காலத்துள் முடிவடைந்துவிடும் ஒன்ருகத் தெரியவில்லை.

இலங்கையின் சுய கௌரவத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான ஒரு போட்டியாகக் கூட இதனைப் பார்க்க முடியும்.

இந்தப் போர் உக்கிரப்பட்டால், இலங்கை இதனை தனது மானப் பிரச்சினை என்ற அளவில் எடுத்துக் கொள்ளுமாளுல் வடக்கு - கிழக்கு மீண்டும் ஒரு நரபலிக் களமாகத் தான் மாறப் போகிறது. பாதுகாப்புக்கான செலவினங்கள் தலைக்கு மேல் சென்று விடும்.

நாட்டின் நன்மையையும் எதிர் கால வேலை வளர்ச்சியையும் கருத்திலெடுத்து ஆளுங்கட்சியினர்களும் அரசாங்கமும் நடந்து கொள்வது அவசியமாகும்.

இந்தியப் பொதுத் தேர்தல்களின் முடிவுகளை இலங்கை எதிர்பார்க்கின்ற கோணம் வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடிய விஷயமல்ல. இந்திய பொதுத் தேர்தல்களின் முடிவுகள் எதிர்க் கட்சியை ஆட்சிக்கு நிறுத்தினலும், இந்திய வெளிநாட்டுக் கொள்கை இலங்கையைப் பொறுத்தளவில் பெரிதும் மாற்றமடையும் என்று, ஒரேயடியாக நம்பிச் செயற்படக் கூடாது. இந்த நேரத்தில் இலங்கை மிகவும் நாகரிகமாகவும், நம்பகமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கமும் வ. கி. மாகாண அரசும் இந்திய அரசாங்கமும் கொண்டிருக்கின்ற கொள்கை முஸ்லிம்களைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. முஸ்லிம் இளைஞர்களைக் கலவரத்துக்குள்ளாக்கியுள்ளது.

முஸ்லிம், சமூகத்தின் அரசியல் தனித்துவத்தை மூடி மறைப்பதற்காக இனங் காணப்பட்ட எல்லாச் சக்திகளும் இணைந்து செயற்படுவதாகத் தெரிகின்றது. முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம் சமூகத்தைப் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் முஸ்லிம் காங்கிரஸை மூன்ருவது பெரும் ஜனநாயக சக்தியாக நிரூபித்திருக்கின்றன. எதிர் கால அரசியல், முஸ்லிம் காங்கிரஸே முஸ்லிம் சமூகத்தின் ஏக குரல் என்பதை உறுதிப்படுத்திவிடும். முஸ்லிம் சமூகம் ஒரே அரசியல் அணியின் கீழ் திரளாவிட்டால் முஸ்லிம் சமூகம் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிவரும்.

**முஸ்லிம் ரிசேர்வ் பொலிஸார் சுமார் 43 பேர் வட—கிழக்கு மாகாண அரசின் தமிழ் தேசிய இராணுவத்தால் தனிமைப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பது காட்டுமிராண்டித்தனமான - வெட்கக்கேடான விடயமாகும்.**

இன்று வடக்கு - கிழக்கின் நிலைமையை அரசாங்கம் பாரபட்சமற்ற முறையில் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். தமக்கு விசுவாசமான படைகளோ, குழுக்களோ அனுப்பி வைக்கின்ற தகவல்கள்தான் முற்று முழுக்க உண்மையானவை என்று அரசாங்கம் மேலெழுந்த வாரியாக நம்பிச் செயற்பட அவசரப்படக் கூடாது.

தென் பகுதிக் கிளர்ச்சியாளர்களை முறியடித்த பெருமிதம் வடக்கு - கிழக்கின் ...

இந்து சமுத்திரத்தின் ஜாம்பவனை இந்தியாவின் கைகெட்டு தூரத்தில் நமது தாய் நாடு அமைந்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட விஷயங்களில் இந்தியாவுக்கும் நமக்கும் உடன்பாடுகள் இருக்கின்றன. கனகாலமாக நாம் நமது தனிப்பட்ட இறைமைகளையும், சுயாதிக்கத்தையும் மதித்துச் செயற்பட்டு வந்துள்ளோம், அண்மைக்காலமாக நமது இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை நாம் மிகுந்த கவலையோடு கவனித்து வருகிறோம்.

**வட - கிழக்கைப் பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கமும் வட-கிழக்கு மாகாண அரசும், இந்திய அரசாங்கமும் கொண்டிருக்கின்ற கொள்கை முஸ்லிம்களைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது.**

நமது பழைய அரசாங்கங்களின் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகள் தான் நம்மை இன்று பலஹீனர்களாக்கியுள்ளது. தமிழர்களாயிருந்தாலென்ன, முஸ்லிம்களாயிருந்தாலென்ன அல்லது வேறெந்த சிறுபான்மையினராயிருந்தாலென்ன எல்லாரும் நம் நாட்டவர்கள் என்ற எண்ணத்தை, நமது நாட்டின் மீதான தேசாபிமானத்தை நாம் வளர்த்தெடுக்காத குறையும் தவறும்தான் நாம் இன்று எதிர்நோக்கியுள்ள சமூக முரண்பாடுகளாகும்,

அதிகாரப் பரவலாக்கம் என்ற கோட்பாடு இந்த சமூக முரண்பாடுகளைத் தீர்ப்பதாகச் செய்யப்பட்ட ஏற்பாடாகும். இந்த ஏற்பாட்டைப் பூரணமாக்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களில் அதிகாரங்களை பரவலாக்குவதில் அரசாங்கம் கடைபிப்டித்த கொள்கையும், காட்டிய தயக்கமும் வடக்கு கிழக்கின் தற்போதைய கலேபரங்களுக்குப் பெரும் பங்களித்திருப்பதை மறந்து விடக்கூடாது.

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கமும் இந்தியப் பின்னணித் தெம்பில் இலங்கை அரசின் கடமைகளையும், உரிமைகளையும் முற்ருக நிராகரித்துச் செயற்படக் கூடாது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## சபையில் சொன்னுர்கள்

★ இந்தியப்படை இருக்கும் வரை தம்மால் ஆயுதங்களைக் கீழே வைக்க முடியாதென L. T. T. E. யினர் எமக்கும், ஜனுதிபதிக்கும் அறிவித்துள்ளனர். அமைதிப்படை வெளியேறியதும் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு ஜனநாயக வழிக்குத்திரும்ப இணக்கம் தெரிவித்துளளனர்.
- அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன.

★ இலங்கையில் எந்த ஒரு தனிப்பட்ட இராணுவமும் இருக்கக் கூடாது. முஸ்லிம்களுக்கோ, தமிழர்களுக்கோ, சிங்களவர்களுக்கோ தனிப்பட்ட படைகள் இருக்ககூடாது. இலங்கையில் ஒரு இராணுவம் மட்டுமே இருக்க வேண்டும். அதில் இன விகிதாசாரப்படி தமிழர்களும், முஸ்லிம்களும் இருக்க வேண்டும்.
-M. L. A. M. ஹிஸ்புல்லாஹ் M. P. (S. L. M. C.)

★ அரசாங்கத்தின் உளவுச் சேவை திருப்திகரமாக இருந்திருந்தால் வடக்கு கிழக்கிலுள்ள நிலைமை பற்றி அறிந்து கொண்டிருக்கலாம். நீங்கள் இந்தியத் தூதுவராலயத்தையும், முதலமைச்சரையும் நம்பியிருக்கத் தேவையில்லை.
- அனுருத்த ரத்வத்த M. P. (S. L. F. P.)

★ இன்றுள்ள இராணுவப்படைகளில், கெமுனு, பராக்கிரமபாகு, சிங்கஹ என்ற பெயரிலே படைகள் இயங்குகின்றன. இவற்றுக்கு சிங்கள மன்னர்களின் பெயர்களே வைக்கப்பட்டுள்ளன.
- மாவை சேனுதிராஜா M. P. (T. U. L. F.)

★ மிகவும் சிரமப்பட்டே எமது இளைஞர்களைப் பாதுகாப்புப்படைக்கு சேர்த்துக் கொண்டோம். எமது கோட்டாவினையாவது பாதுகாத்துக் கொள்ள இவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள உத்தரவு வழங்குங்கள்.
- M. A. அப்துல் மஜீத் (U. N. P.)

★ முழுநாட்டுக்கும் பொருத்தமான கல்வி முறை ஒன்றினை இச்சபையின் சகல தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் வகுப்பது அவசியமாகும். அரசாங்கங்கள் வரலாம் போகலாம். ஆனல் கல்விக் கொள்கை மாறக்கூடாது.
- அமைச்சர் A C S. ஹமீத்

★ உரிமைப் பிரச்சினையை ஆயுதபலத்தால் அழிக்க முடியாது. 1987க்கு முன் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் உட்பட உலகின் பல நாடுகளின் உதவியைப் பெற்று எமது போராட்டத்தினை நசுக்க முற்பட்டார். ஆனல் போராட்டம் ஓயவில்லை. உரிமைப் பிரச்சினையை ஆயுத பலத்தால் தீர்க்கமுடியாது என்பதனை நீங்கள் உணரவேண்டும்
- பரராஜசிங்கம் M. P. (EROS)

★ இன்று படித்தவர்கள் தொழில்கேட்டு எம்மைச் சூழ்ந்துள்ளார்கள். 85 சமூக சேவை அதிகாரிகளை நீங்கள் நியமித்துள்ளீர்கள் அவர்களில் முஸ்லிம் எவரும் இல்லை.
M. M. அபூபக்கர் M. P. (S. L. M. C.)

★ இந்தியப்படை ஆயுதங்களைக் களையவே வந்தது. ஆனல் அவர்கள் [illegible] ஆயுதமயப்படுத்தினர்கள். இரு மாகாணங்களுக்கும் அவர்களே பொறுப்பாக இருந்ததனல் அவர்களைத்தவிர வேறுயாரும் அங்கு ஆயுதம் வழங்கியிருக்க முடியாது.
- அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் பேச்சளவில் இல்லாமல் தமிழ் மொழி அமுலாக்கலை தாமதமின்றி நடைமுறைப்படுத்துக !

— தலைவர் அஷ்ரப்

தமிழ் மொழி அமுலாக்கலை பேச்சளவில் மட்டுமின்றி அதனை செயல்பத்துடுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டவரைவுக்கு ஏற்பட்ட கதி தமிழ் மொழி அமுலாக்கலுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது.

ஸ்ரீ ல மு காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். எச். எம். அஷ்ரஃப் நாடாளுமன்றத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டக்கல்விப் பேரவை கட்டளைகள் சட்டம் தொடர்பான விவாதத்தில் பேசிய ஜனாப் அஷ்ரஃப் மேலும் கூறியதாவது.-

சட்டக் கல்வியைத் தொடர விரும்பும் அரச ஊழியர்கள் ஒவ்வொருவரும் முழுநேர மாணவர்களாக இருந்து கல்வி பயில வேண்டும் என்று கட்டாயமாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

அரச ஊழியர்கள் கடமையில் இருந்து கொண்டே சட்டம் பயில்வது பொது மக்களின் நிதியை விரயம் செய்வதாகும்.

இப்பொழுது கொழும்பிற்கு இடமாற்றம் பெற்று வரும் பாடசாலை ஆசிரியர்களுள் பலர் சட்டக்கல்வியை தொடர்கின்றனர்.

அவர்கள் பாடசாலைகளில் இருந்து சட்டத்தைத் தான்படிக்கின்றார்களே தவிர மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை.

இப்படியானவர்களால் எதிர்கால சந்ததியினர் நாசமாக்கப் படுகின்றனர்.

நீதித்துறையில் மொழிப் பிரச்சினைக்கு இடமளிக்கக் கூடாது.

இப்பொழுது சட்டக் கல்லூரி இன ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி மாணவர் வேருகவும், சிங்கள மாணவர் வேருகவும் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனுல் அங்கு இன, மொழி வேறுபாடுகளும் வெறுப்புணர்ச்சிகளும் ஆரம்பமாகின்றன.

இதனை தவிர்ப்பதற்கு ஒரேவழி சகல மாணவர்களுக்கும் மூன்று மொழி மூலம் சட்டக்கல்வி போதிக்கப்பட வேண்டும்.

சட்டக் கல்லூரி ஒரு தனிப்பட்ட குழுவினருக்கு மட்டும் என்பதை என்னுல் ஏற்க முடியாது. சிறப்புரிமை பெற்றவர்களுக்குதான் இடமுண்டு என்பதும் பிழை.

இப்பொழுது தமிழ் அரச மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனை மனதிற்கொண்டு உறுப்பினர்கள் பேசவேண்டும்.

உயர் நீதிமன்றத்தில் கருமங்கள் சிங்கள மொழியில் மட்டும் நடைபெற வேண்டும் என்று திரு. நிமல் சிறிபால டி சில்வா கூறியது விவேகமாகாது.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மொழிச் சட்டம் உருவாக்கப்பட்டது. பின் தமிழ் மொழி விசேட சட்டம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் கடந்த 35 வருடங்களாக சாதித்தது எதுவும் இல்லை.

இப்பொழுது தமிழ் மொழியும் அரசகரும மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது பேச்சளவில் மட்டுமே. இதனை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும்.

இன்று நாடாளுமன்றத்தில் எமக்கு தேசிய நீர் வழங்கல் சபையினுல் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் தமிழ் கொலை செய்யப்பட்டுள்ளது.

முகப்பு அட்டையிலேலே பெரும் பிழை காணப்படுகின்றது. இதனை அச்சிடுவதற்கு ஒப்புதல் அளித்த அதிகாரியின் அசட்டையே இதற்குக் காரணம்.

இப்படியான அதிகாரிகள் எந்த விதமான முன் அறிவித்தலும் இன்றி உடனடியாக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும்.

தமிழ் மொழியை கையாளும் போது மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

இப்படி ஜனுப் அஷ்ரஃப் கூறினுர்.



ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸின் நிதிப்பணிப்பாளர் அல்ஹாஜ் M.H. அப்துர் ரஹ்மான் கொழும்பு மாவட்டத்திற்கான சமாதான நீதவானுக, அண்மையில் கொழும்பு பிரதம மாஜிஸ்ரேட் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## வாசகர் வாசகங்கள்

'முஸ்லிம் காங்கிரஸ்' சமூக அரசியல் விடயங்களை சுடச்சுடத் தருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டி எழுதுவதையிட்டும் பாராட்டுகிறேன்.

நேயர் கடிதம், கேள்வி பதில், மாணவர்களுக்கான ஒரு பகுதி, பொது அறிவுப் போட்டி முதலியனவும் உங்கள் பத்திரிகையில் இடம் பெற்றுல், என்னைப் போன்ற பரீட்சை எழுதக் காத்திருக்கும் மேல் வகுப்பு மாணவர்களுக்குச் செய்யும் மாபெரும் சேவையாகாதா?

ரிஸ்வி அஹமத்
ஸகீனு
வறக்காப்பொலை

குறிப்பு:-

உங்களைப் போன்றே பல வாசகர்களும் மேற்கூறிய பகுதிகளை ஆரம்பிக்கும்படி கேட்டு எழுதியிருக்கிறுர்கள். இடப் பிரச்சினை காரணமாக அதிக அம்சங்களைச் சேர்க்க முடியாத நிலையிலுள்ளோம். எனினும் குறைந்த பட்சம் கேள்வி பதில் பகுதியையாவது ஆரம்பிக்க முயற்சி பண்ணுகிறுேம்.

-ஆசிரியர்

வடக்கு....

(3ம்-பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அறுதிப்பெரும்பான்மையுடைய ஈ. பி. ஆர். எல். எப். தவிசாளர் மாகாண சபையைத் தனது இஷ்டத்துக்கு, தான் தோன்றித்தனமாக நடாத்திச் செல்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இன்னும் வ. கி. மகாண சபைக்கான அன்பளிப்புகள், ஒதுக்கீடுகள் வேலை வாய்ப்புகள் போன்ற விடயங்களில் முஸ்லிம் சமூகம்

வட-கிழக்கு மாகாணசபையில் அறுதிப் பெரும்பான்மையுடைய EPRLF தவிசாளர் மாகாண சபையைத் தனது இஷ்டத்திற்கு தான்தோன்றித்தனமாக நடாத்திச் செல்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பல விடயங்களில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டிருப்பது EPRLF/ENDLF கூட்டரசாங்கத்தின் மீது முஸ்லிம்களை நம்பிக்கை இழக்கச் செய்து வருகிறது.

புறக்கணிக்கப் பட்டிருப்பது ஈ. பி. ஆர். எல். எப், ஈ. என். டி. எல். எப். கூட்டாட்சி அரசாங்கத்தின் மீது முஸ்லிம்களை நம்பிக்கை இழக்கச் செய்து வருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண அரசுக்கு அ க்கமான பிரஜைகள் தொண்டர் படைக்காக முஸ்லிம் இளைஞர்கள் அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் திரட்டப்பட்டனர். அவர்கள் திருகோணமலைக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். தமக்குரிய பயிற்சி முகாம்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவதற்கு முன்னர் அவர்கள் ஈ. பி. ஆர். எல். எப் பின் கண்காணிப்பில் இருந்தனர். அப்போது அவர்கள் முஸ்லிம் இளைஞர்களைப் படுத்திய கொடுமைகளும் செய்த சித்திரவதைகளும் வடக்கு - கிழக்கு மாகாண ஈ. பி. ஆர். எல். எப். அரசாங்கத்தின் மீது முஸ்லிம் சமூகத்திற்கிருந்த நம்பிக்கையின் அடித்தளத்தையே ஆட்டங் காண வைத்து விட்டது.

இது போதாதென்று. கடந்த 9.11.89 வியாழன் அதிகாலை காரைதீவு பொலிஸ் போஸ்ட்டில் இருந்த முஸ்லிம் ரிசேவ் பொலிசார் சுமார் 43 பேர் வடக்கு - கிழக்கு மாகாண அரசின் தமிழ் தேசிய இராணுவத்தினரால் தனிமைப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பது காட்டுமிராண்டித்தனமான, வெட்கக் கேடான விஷயமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்த பொலிஸ் நிலையங்களைத் தெரிந்து தமிழ் தேசிய இராணுவம் தாக்கியிருப்பது தமது விரல்களைக் கொண்டு தமது கண்ணென்றையே குத்திப் படுகாயப்படுத்திய செயலுக்கு ஒப்பானதாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களுள் ஒன்ருன அம்பாறை மாவட்டத்தின் மீதான கட்டுப்பாட்டை வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கம் தனது அவசர முடிவால் இழந்திருப்பது வடக்கு - கிழக்கு மாகாண அரசு தனது பதவியை இராஜினமாச் செய்ய வேண்டிய விஷயமாகும்.

இன்று அம்பாறை மாவட்டத்தின் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பான வட - கிழக்கு மாகாண முதலமைச்சர் அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தை நட்டாற்றில் கைவிட்டுள்ளார்.

இன்று அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பானவர் யார்? அம்பாறை மாவட்டத்தில் இலங்கை இராணுவம் குடி கொண்டுள்ளது. அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடைப் பொலிஸ் நிலையங்கள் இலங்கைப் பொலிஸினதும் இராணுவத்தினதும் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. மேற்சொன்ன பொலிஸ் நிலையங்களில் கடமை புரிந்த முஸ்லிம் பிரஜைகள் தொண்டர் படையும், முஸ்லிம் றிசேர்வ் பொலிஸ் படையும் தமிழ் தேசிய இராணுவத்தின் பாரபட்சமான கொலை நடவடிக்கைகளுக்குப் பயந்து தமது கடமைகளைத் துறந்து தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்துள்ளனர். இப்பொலிஸ் நிலையங்கள் சிங்களப் பொலிசாரல் நிரப்பப்பட்டு வருவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. மாகாணப் பொலிஸ் சட்டமாக்கப்படாமல் இழுத்தடிக்கப் பட்டது. இந்த களேபரங்களுக்கு அடுத்த முக்கிய காரணமாகும். இவற்ருேடு விடுதலை புலிகள் அம்பாறை மாவடட்த்தில் சுதந்திரமாக உலவுவதற்கும், பிரச்சாரம் செய்வதற்கும் தமது ராணுவ நடவடிக்கைளை மேற்கொள்வதற்கும் சாதகமான சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது.

இவையெல்லாம் கூட்டு மொத்தமாக அம்பாறை மாவட்டத்தை 1887 ஜூலை 29க்கு முன்னுள்ள நிலைமையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலைமையினுல் பாதிக்கப்படப் போகின்றவர்கள் வேறு யாருமல்ல, நிச்சயமாக முஸ்லிம்கள்தான்.

முஸ்லிம்களை ஈ. பி. ஆர். எல். எப். அரசாங்கம் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளியுள்ளது. முஸ்லிம்கள் எந்தத் தமிழர் இயக்கத்திடமும் நீதியையும், நியாயத்தையும், பாரபட்சமற்ற நிர்வாகத்தையும், புரிந்துணர்வையும், நல்லுறவையும் எதிர்பார்ப்பது பச்சை முட்டாள்த்தனம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் முஸ்லிம்கள் தமது காலிலேயே நிற்க வேண்டிய நிலை எழுந்துள்ளது. இது இலேசான காரியமல்ல. மாகாண அரசுக்குச் சார்பான சில தமிழர் ஆயுதக் குழுக்களும் இவற்றின் இம்சைகளுக்கு இடைப்பட்டு முஸ்லிம் சமூகமும் இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான முடிவு காண வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையைத் தீர்க்காமல் விட்டு வைத்திருப்பது இடைஞ்சலை விளைவிக்கக் கூடிய விஷயமாகும். இதனை மத்திய அரசும் மாகாண அரசும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று வெளியினிலே...

வானம்பாடி

★ ''வாட்டர் கேட்' அமெரிக்காவை ஒரு கலக்குக் கலக்கி நிக்ஸனை பதவியிலிருந்து வீழ்த்தியது. இதனை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய இதழ், 'வாஷிங்டன் போஸ்ட்' ஜனநாயகக் காவலன் பத்திரிகை என்பதால் கடைசியாக, 'இந்து' (THE HINDU) பத்திரிகை வெளியிட்ட 'போபர்ஸ்' ஆதாரங்களை ராஜீவ் அரசு, ஜனநாயக மரபு வழி சிந்திக்காமல், பதவிவழி- சிந்தித்ததால்தான் தோல்வியைத் தழுவியது. போபர்ஸ் பிரச்சினையின் கரு, அதில் மறைக்கப்பட்ட பணம் அல்ல; மாறாக இந்திய அரசியல் அமைப்பின் மீதான நம்பிக்கையை அறவே இழக்கச் செய்யும் அளவுக்கு, ராஜீவ் இப்பிரச்சினையை மறைக்கப் பார்த்ததேயாகும்- 'போபர்ஸ்'ஸிலிருந்து திசை திருப்ப தேர்தலை அதிரடியாக அறிவித்ததானது, ''தலையைச் சொறியக் கொள்ளிக் கட்டையை எடுத்த கதையாக முடிந்தது விட்டது.'' என்று இந்திய அரசியல் நிலவரங்களில் ஈடுபாடு கொண்ட உள்ளூர் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தனது நண்பரிடம் கூறினாராம்.

● ● ●

★ அண்மையில், இஸ்ரேலில் உள்ள 'சமூக அபிவிருத்திக்கான கோல்டா மேயர் சர்வதேச பயிற்சி நிலையத்திலிருந்து' இரு இஸ்ரேலியர்கள் (ஒருவர் ஆண். மற்றவர் பெண்.) மகரகமையிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிலையத்தில் மூன்று வாரப் பயிற்சிக் கருத்தரங்கை நடத்தினராம். ''கருத்தரங்கை நடத்தியவர்கள் எந்தெந்தக் கருத்துக்களை நமது இளைஞர்களிடம் திணித்தார்களோ தெரியவில்லை. ஏனெனில், 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல' தமது செல்வாக்கினை நாசூக்காகப் பிரயோகிப்பதில் அவர்கள் எமகாதகர்கள்'' என ஓர் அரசியல்வாதி கவலையுடன கூறினாராம். ' இஸ்ரேலுடனான உறவை முற்றாக வெட்டிவிட வேண்டும். காலந் தாழ்த்தக் கூடாது என்ற கருத்து வேரூன்றி வருகின்ற இவ்வேளையில் இஸ்ரேலியர்களை வரவழைத்து பயிற்சியளிப்பதானது, முஸ்லிம்களின் உணர்வுகளை அரசாங்கம் மதிக்காமல் செய்கின்ற நடவடிக்கையாகும். 'நீ மரத்திலிருந்து குரல் கொடுத்தாலும் நான் 'மடி'யைப் பார்க்கத்தான் செய்வேன்' என்ற போக்கு இன்னும்தான் இருக்கிறது. இதை உரியவர்களிடம் சொல்லவும் முடியவில்லை, சொல்லியும் பயனில்லை'' என்று அரசாங்க சார்பான அந்த அரசியல்வாதி தனக்கு வேண்டியவரிடம் மேலும் நொந்து கொண்டாராம்.

● ● ●

★ நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆண்ட ஒரு கட்சிக்கு தனது தேர்தல் அறிக்கையை (Manifesto) வெளியிடுவது சிரமமில்லாத காரியமாக இருக்க வேண்டும். ஆனால் தேர்தல் நாள் அறிவித்து, பல நாள் தாமதத்திற்குப் பின் ராஜீவ், காங்கிரஸ் அலுவலகத்திற்கு வந்து அதனை வெளிவிட்டாரம். அறிக்கையைத் தவிர வேறு எதைப்பற்றிய கேள்விக்கும் பதிலளிக்க மறுத்துவிட்டாரம். மிகச்சில அறிக்கைப் பிரதிகளே இருந்தனவாம். நகல் எடுக்கும் மெஷின் பழுதாகிவிட்டது என்றார்களாம்.

மோசமான நிர்வாகத்தின் ஓர் அடையாளம் இது. இதுவேதான் பிரச்சாரத்திலும் பிரதிபலித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பத்திரிகை வெளியீட்டுக்கு முன் தேர்தல் அறிக்கையின் பிரதிகள் மாநில முதல் மந்திரிகளுக்கு கூட கிடைக்கவில்லையாம். வினைவு எதிர்க் கட்சித் தலைவர்கள் கம்பீரமாக முழங்கிக் கொண்டிருந்த போது இ. காங். மாநிலத் தலைவர்கள் என்ன செய்தியைப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று தெரியாத இருளில் இருந்தார்களாம். இன்னும் மோசம் ராஜீவின் தேர்தல் பயணத்தைப் பற்றிய தெளிவான முன்னறிவிப்பு மாநில முதல் மந்திரிகளுக்கு கிடைக்காததாகும். மறுநாள் காலை ராஜீவ் வரப்போவதாகச் சொல்லி, நடு இரவில் சிலர் எழுப்பப்பட்டார்களாம். தொண்டர்களை முடுக்கிவிடச் சமயம் இல்லாமல் போனதால், கூட்டம் சேர்வது குறைந்துவிட்டது. கூட்டம் இல்லமல் போனதாலேயே உத்தரப் பிரதேசத்திலும், பீஹாரிலும், குஜாராத்திலும் இ. காங்கிரஸ் 40 கூட்டங்களை ரத்துச் செய்ய வேண்டி வந்ததாம்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ராஜீவின் காங்கிரஸ் கட்சி விளம்பரத்திற்கு மட்டும் 27 கோடி இந்திய ரூபாய்க்கும் மேலாகச் செலவு செய்ததாகக் கூறப்படுகிறது.

● ● ●

★ அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற இலங்கை இராணுவத்திற்கெதிரான T.N.A வின் 'ஒபரேஷனின்' போது, அதன் கொமாண்டர்கள் ஒந்தாச்சிமடத்திலுள்ள IPKF கேம்பிலிருந்து கொண்டுதான் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தனராம். இந்த ஒபரேஷனில், T.N.A யின் தோல்விக்காக அம்பாறை மாவட்ட ENDLF கொமாண்டர் காலித் கடுமையாக விமர்சிக்கப்பட்டாராம். வடகிழக்கு மாகாண சபையின் 'கிரு'பைக்குரிய அமைச்சரும் T.N.A கொமாண்டருடன் சேர்ந்து கொண்டு 'டிரக்ஷன்ஸ்' கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அதே வேளையில் இவ்விருவருக்கும் 'டேவிட்' என்ற சங்கேதப் பெயரையுடைய ஒரு RAW உத்தியோகத்தர் 'இன்ஸ்ரக்ஷன்ஸ்' கொடுத்துக் கொண்டிருந்தாராம். இப்போது EPRLF, அம்பாறை மாவட்ட ENDLF கொமாண்டரை நீக்கி விட்டு, அந்த இடத்திற்கு தனது 'ஆள்' ஒருவரைப் போட ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இத்தகவல்களை ஓர் ஆங்கிலப் பத்திரிகை [illegible] ருந்ததாம்.

# முஸ்லிம் உலகம்

ப. வாஸ்

## பர்தா தடையை எதிர்த்து பாரீஸில் ஆர்ப்பாட்டம்

பாடசாலை வகுப்பறையில் முஸ்லிம் மாணவிகள் 'பர்தா' அணிவதை பாரீஸின் வட பகுதியிலுள்ள ஓர் உயர் நிலைப் பாடசாலை தடை செய்ததை எதிர்த்து நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் அண்மையில் பிரான்ஸின் தலைநகரான பாரீஸில் ஆர்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.


'பர்தா' அணிந்ததற்காக அப் பாடசாலையை விட்டு முஸ்லிம் மாணவிகள் நீக்கப்பட்டதை எதிர்த்து நடந்த இந்த ஊர்வலத்தில், ''எமது யாப்பு புனித குர்ஆன் மட்டுமே'', ''பர்தா அணிவது எங்களது சுதந்திரம்'' போன்ற சுலோகங்கள் ஊர்வலத்தில் கோஷிக்கப் பட்டன.

''ஆண்களின் கவனத்தை என் மீது திசைதிருப்ப நான் விரும்பவில்லை ''என்று அவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட 'பர்தா, அணிந்த ஒரு பெண்மணி கூறியிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது.

சமயம் சம்பந்தமான நடவடிக்கைகள் பாடசாலை வகுப்பறைகளில் தடை செய்யப்பட்டவை என்ற கோதாவில், பல பாடசாலை தலைமை ஆசிரியர்கள் இஸ்லாமிய உடை மீது கொண்டு வந்த தடை பிரான்ஸில் பெரிய பிரச்சினையாகி விட்டது. 'பர்தாவுக்கான யுத்தம்' என்ற தலைப்பில் பல பத்திரிகைகள் முன்பக்கச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

பிரான்ஸில் இரண்டாவது பெரிய சமயம் இஸ்லாம் என்ற வகையில் இப்பிரச்சினை தேசிய முக்கியத்துவம் பெற்று விட்டது. இதன் காரணமாக, பிரான்ஸ் கல்வியமைச்சர், முஸ்லிம் மாணவிகள் பாடசாலையை விட்டு நீக்கப்பட்டதை எதிர்த்துள்ளார். அதுமட்டுமல்ல, மிக அரிதாக அறிக்கை வெளியிடும் பிரான்ஸ் ஜனாதிபதி திரு. மிட்டரங்கின் மனைவி கூட, முஸ்லிம் மாணவிகள் சார்பாக அறிக்கை விட்டு, ''முஸ்லிம் மாணவிகள் தமது இஸ்லாமிய உடையணிந்து பாடசாலைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும்'' என்று கூறியிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது.

பிரான்ஸில் 30 லட்சம் முஸ்லிம்கள் இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.




1988ம் ஆண்டு ஜூன் மாதக் கடைசியில் அமெரிக்க செனட், ''ஐ. நா. வுக்கான P. L. O. காரியாலயம் மூடப்பட வேண்டுமென்று'' ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. ஆனால் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் ''P. L. O. வுக்கு அதன் காரியாலயத்தை ஐ. நா. வில் வைத்திருப்பதற்கு உரிமையுண்டு, எனத் தீர்ப்பளித்தது. அதனையொட்டி, சவூதி அரேபியாவின் ஆங்கிலத் தினசரியான 'ARAB NEWS' வெளியிட்டிருந்த கார்ட்டூனையே மேலே காண்கிறீர்கள்.

நன்றி: அரப் நியூஸ்

## ஐ. நா.வுக்கு அமெரிக்காவின் எச்சரிக்கை

பாலஸ்தீன விவகாரம் சம்பந்தமான விடயங்களில், அமெரிக்கா எப்போதும் எதிரான போக்கினையே கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயம்.

தனது வளர்ப்புப் பிள்ளையும், செல்லப்பிள்ளையுமான இஸ்ரேலுக்குச் சாதகமாகவே எப்போதும் நிலையெடுக்கும்-- அது அநீதியாக இருந்தாலும் சரி, உலக நாடுகளின் அபிப்பிராயம் ஒருமித்து எதிராக இருந்தாலும் சரி-- என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் வளர்ந்து செல்வாக்குப் பெற்ற-- அம்மண்ணின் மக்களால் ஏகோபித்த முறையில் அங்கீகரிக்கப்பட்ட இயக்கம் என்றுமே அழித்தொழிக்க முடியாத இயக்கம் என்ற [illegible] அமெரிக்கா ஜீரணிக்க முடியாமல் ஜீரணித்ததன் விளைவுதான். மத்திய கிழக்கு சம்பந்தமான அதன் சமீபத்திய (எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக், ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் போன்றோருடன் இணைந்த) சமாதான முயசிற்களாகும்.

எனினும், அமெரிக்காவின் அடிமனதில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நசுக்கும் போக்கே வேரூன்றி உள்ளது என்பதை அதன் சமீபத்திய எச்சரிக்கை மீண்டும் நிரூபித்துள்ளது.

அதாவது, ''ஐக்கிய நாடுகள் சபை, பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு உறுப்பினர் அந்தஸ்தை வழங்கும் பட்சத்தில் ஐ. நா. வுக்கான அமெரிக்க உதவிகளை அமெரிக்கா வழங்கமாட்டாது'' என்ற எச்சரிக்கையை ஐ. நா. வுக்கு விடுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு இனப் படுகொலை பற்றி

## வடக்கு - கிழக்கு முதல்வருக்கு சகோதரர் மஜீத் எழுதிய கடிதம்

திரு. வரதராஜபெருமாள்
கௌரவ முதலமைச்சர்
வட கிழக்கு மாகாண அரசு
திருகோணமலை

**காரைதீவு இனப் படுகொலை -
பாரபட்சமற்ற
நீதி விசாரணை வேண்டும்**

அம்பாறை மாவட்டத்தில் - குறிப்பாக காரைதீவில் கடந்த 17-11-1989ல் நடைபெற்ற காட்டுமிராண்டித் தனமான இனப்படுகொலை தொடர்பாக அப்பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நீதி விசாரணை வேண்டி வட - கிழக்கு மாகாணங்களின் முதல்வர் என்ற வகையிலும் அம்மாகாணங்களின் சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும் இக்கடிதத்தை தங்களுக்கு வேதனை நிறைந்த இதயத்துடன் எழுதுகிறேன்.

கடந்த 17-11-1989ல் காரைதீவில் வைத்து முஸ்லிம் பொலிஸ் இளைஞர்கள் தமிழ் தேசிய இராணுவத்தினரால் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். தங்களது நிர்வாக எல்லைக்குள் நடைபெற்ற இச்சம்பவத்தையிட்டு தாங்கள் மௌனியாக இருப்பது கண்டு நான் அதிர்ச்சியும் ஆச்சரியமும் வேதனையும் அடைகின்றேன். எங்களை அதிரவைத்திருக்கும் உங்கள் மௌனம் - முஸ்லிம் சமூகம் தங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் நல்லெண்ணமும் சிதறிப்போகும் பரிதாப நிலை உருவாகியுள்ளதனை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். 1982 செப்டம்பர் மாதம் 15ந் திகதி வியாழக்கிழமை பலஸ்தீன அகதிகள் முகாம்களான சற்றிலா, சப்ரு மீது இரத்த வெறி பிடித்த இஸ்ரேலியர்கள் நடத்திய கோழைத்தனமான தாக்குதலை விட - காரைதீவு சம்பவம் மிகக் கொடியதொரு சம்பவமாகும்.

தமிழ் பொலிஸாரை ஒரு பக்கமும் முஸ்லிம் பொலிஸாரை ஒரு பக்கமும் பிரித்து - தமிழ் பொலிஸாரை ஓடும்படி கூறிவிட்டு - 42 முஸ்லிம் பொலிஸாரை மாத்திரம் சுட்டுக் கொன்றது முஸ்லிம்கள் மீது தமிழ் இயக்கங்கள் கொண்டுள்ள வகுப்புவாத இனவெறியை அப்பட்டமாகவே எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய செயலானது மாகாண அரசு மீதும் தமிழ் குழுக்களின் தலைமைத்துவத்தின் மீதும் முஸ்லிம் சமூகம் கொண்டிருந்த நம்பிக்கை இல்லாமல் போவதற்கு ஏதுவாகலாம். மாகாண அரசினதும், தமிழ் இயக்க தலைவர்களினதும் தொடர்ச்சியான மௌனம் முஸ்லிம் சமூகம் மேலும் அச்சப்பட வேண்டியதொரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இத்தகைய போக்குகள் வட - கிழக்கு மாகாணத்தின் நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்கும் ஆரோக்கியமாக அமையப்போவதில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள்.

வட - கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சர் என்ற வகையிலும் அம்மாகாணங்களின் சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியிலும் வட - கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற அனைத்து சமூகங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயக் கடப்பாடு தங்களுக்குரியது என்பதை தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

சிங்களப் படைகள் தமிழ் மக்களை கொன்று குவித்த போதெல்லாம் - ஆட்சியில் உள்ளவர்கள் செவிடர்களாகவும். குருடர்களாகவும் இருந்து செயல்பட்டதை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். அவர்களின் அத்தகைய போக்குகளையே காரைதீவு இனப்படுகொலை சம்பவத்திலும் மாகாண அரசின் மௌனம் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் தமிழ் முஸ்லிம் உறவுகள் என்பது கசாப்புக் கடையில் தேனைக் காண்பதற்கொப்பானதாகும்.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இதுகாலவரை ஏற்பட்டு வந்த கசப்புணர்வுகளை - பகையுணர்வுகளை மறக்கடித்து இந்தப் பிரதேசத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியத்தோடும், புரிந்துணர்வோடும் வாழவேண்டும் என்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அயராது பாடுபட்டு வரும் வேளையில் - காரைதீவு இனப்படுகொலையானது எங்களது அயராத முயற்சியை அதள பாதாளத்திற்குள் தள்ளியுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாகுவதற்கு முன் இலங்கையில் முஸ்லிம் சமூகம் எடுப்பார் கைப்பிள்ளையாகவும், ஊமையாகவும் இருந்தது. தொடர்ந்தும் நாங்கள் குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் இருந்து வருகின்றோம் என நினைப்பது தவறானதாகும்.

வட - கிழக்கு அரசு முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டுமென பல தடவைகள் மாகாண சபையில் எங்களால் எடுத்துக் கூறப்பட்டிருந்தும் இப்படுகொலைகள் நடந்துள்ளன.



வட-கிழக்கு மாகாண அரசு முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டுமென பல தடவைகள் மாகாணசபையில் எங்களால் எடுத்துக் கூறப்பட்டிருந்தும் இப்படுகொலைகள் நடந்துள்ளன.

கடந்த 14-03-1989ல் நாம் மாகாணசபை உறுப்பினர்களாக பதவியேற்ற நாள் தொடக்கம், வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ் குழுக்களால் முஸ்லிம்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற அனைத்து விடயங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி வந்துள்ளோம்.


எமது முயற்சிகள் அனைத்தும் காட்டிலிறைத்த நிலவாய்-

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## பள்ளிவாசல் புனரமைப்பு

காலி மாத்தறை வீதியில் ஹிஜ்ரி 503ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட ''ஹஜ்ஜிவத்தை மஸ்ஜித்'' என்று அழைக்கப்படும் முஸ்லிம்களின் சரித்திரப் பலம் வாய்ந்த 1107 வருட காலமுடைய பள்ளிவாசல் பல வருடங்களாக பழுதடைந்து பார்ப்பார் யாருமின்றி சிங்கள மீனவர்கள் தமது சொந்த பாவனைக்குள் வைத்திருந்த பள்ளிவாசலின் பரிதாப நிலை குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பா. உறுப்பினருமான சகோ. எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் கடந்த ஜூலை 19ம் திகதி கல்வி, கலாசார, தகவல் அமைச்சரிடம் சில கேள்விகள் பாராளுமன்றத்தில் எழுப்ப முன் அறிவித்தல் கொடுத்திருந்தார்.

முன் அறிவித்தல் கொடுத்ததையடுத்து பிரஸ்தாப பள்ளிவாசலின் புனர் நிர்மாண வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பள்ளிவாசலின் அவலநிலையை காலி சோலை மலர் கட்டுகொடை முஹியுத்தின் பள்ளி திறப்பு விழா மலர் ஆகிய மலர்களில் சுட்டிக் காட்டியிருந்ததை காலி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் செயலகம் இப்பிரச்சினை தலைவரின் கவனத்துக்கு கொண்டு வந்த என்பது குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் அல் ஹாஜ் எம். எம். பாறூக், கொழும்பு மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக, அண்மையில் கொழும்பு பிரதம மாஜிஸ்ரேட் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

## இவர்கள் இயம்பியவை

★ இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எந்த ஒரு தனிக் கட்சிக்கும் சொந்தமானதல்ல.

-வி. பிரூ சிங் (இந்தியாவின் புதிய பிரதமர்)

★ புதுடில்லியிலுள்ள திரு. சிங்கின் உண்மையான தலைமைத்துவத்தின் கீழ் உள்ள புதிய நிர்வாகத்துடன் நட்புறவினை வளர்த்துக் கொள்வதற்கும் பலப்படுத்திக் கொள்வதற்கும் எமது இயக்கம் தயாராக இருக்கிறது.

-வே. பிரபகாரன் (LTTE தலைவர்)

★ முஸ்லிம் மாணவர்கள் தாம் விரும்பும் மொழியில் கல்வி கற்க கல்வித் திணைக்களம் குறுக்கே நிற்கக்கூடாது. சிங்கள மொழியில் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்ட மாணவியின் விடயம் தொடர்பாக நியாயம் கோரி பெற்றோர் ஒருவர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்ற முயற்சியை இங்கு நினைவு படுத்துகிறேன்.

-H. M. பாரூக் MPC (S. L. M. C)

★ கல்வியின் மகத்துவம் பற்றி புனித குர்ஆனில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. மத்தியமாகாண முஸ்லிம் பாடசாலைகளின் மாணவிகள் 'பர்தா' அணிவதற்கு கட்டாயப்படுத்த வேண்டும்,

I. M. அத்ஹம் MPC (S. L. M. C)

★ இந்திய அரசியல் சாசனத்தில் உறுதிப் படுத்தப்பட்ட முஸ்லிம்களின் உரிமைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.

-வாஜ்பாய் (பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவர்)

★ இலங்கையின் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ள இந்திய அமைதி காக்கும் படையைக் கட்டம் கட்டமாக வாபஸ் பெறுவதையே எனது அரசாங்கம் விரும்புகிறது.

-வி. பி. சிங் (இந்தியப் பிரதமர்)

★ மும்மொழித் திட்டம் இன்றைய சூழ்நிலையில் அவசியமான விடயங்களில் ஒன்று என்பதில் எவ்வித வாதப் பிரதிவாதங்களுக்கும் இடமேயில்லை. தேசிய ஐக்கியம் என்ற ஒரு காரணத்திற்காக மட்டுமன்றி, பன்மொழி அறிவுக்கும் அது உதவுவதாக இருக்கும்.

-வீரகேசரி நாளிதழ்

★ இலங்கைக்கு தீமை விளைவித்தவர்கள் தங்கள் முடிவுகளைத் தாங்களே தேடிக் கொள்வர் என்பது தெட்டத்தெளிவாகி விட்டது.

-ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி [ஸல்] அவர்கள் ஜீவகாருண்யத்தை மிக வன்மையாக வலியுறுத்தியுள்ளார்கள்!

## பாராளுமன்றத்தில் சகோதரர் அபூபக்கர்

''தான் வளர்த்த பூனே தன்னுடைய சமையலறையில் உணவு வகைகளை உண்டு நஷ்டம் செய்ததனுல் ஆத்திரமடைந்த ஒரு பெண் அந்தப் பூனேயைக் கட்டிவைத்து உணவு கொடுக்காமல் விட்டதனுல் அந்தப் பூனே இறந்ததன் காரணமாக, அவள் நரகத்திற்குப் போனுள் என்பதாக எங்களுடைய நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.''

இவ்வாறு புத்த சாசன அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் சகோ. அபூபக்கர் கூறினுர்

அவர் தொடர்ந்து கூறியதாவது:

இந்த நாட்டை ஆட்சிசெய்த தேவநம்பியதிச மன்னனும், அரஹத் மகிந்தவும் இந்த நேரத்தில் எங்கள் ஞாபகத்திற்கு வருகிருர்கள். அன்று இந்த நாட்டு, மக்களை வழிநடத்துவதற்கு இந்நாட்டை நோக்கி வந்த தர்மத்தை - சத்தியத்தை ஏற்று அவர்கள் இலங்கையை வழிநடத்திஞர்கள். அவ்வாறே இன்று ஆட்சியிலுள்ளவர்களும் மக்களை வழிநடத்தக் கூடிய சிறந்த வாழ்க்கை முறையையும், ஆன்மீக தத்துவங்களையும் ஏற்று இந்த நாட்டு மக்களை நேர்வழிப்படுத்தும் முயற்சிகளில் தேவநம்பியதீசனைப் போல ஈடுபட வேண்டும்.

உலகத்தில் மனித சமுதாயத்தின் மூலத் தந்தையாக ஆதம் நபி(அலை) அவர்கள் விளங்கிஞர்கள் என நாங்கள் நம்புகிருேம். அந்த முதல் மனிதராகிய ஆதம் (அலை) இலங்கையிலே தோற்றுவிக்கப்பட்டார்கள் என்று நம்புகிருேம் 'Adam' sPeak' என்ற ஆதம்மலை இலங்கையில்தான் இருக்கிறது. முஸ்லிம்களாகிய நாங்கள், இந்த உலகத்தில் ஒருலட்சத்து இருபத்தி நாலாயிரம் நேர்வழி காட்டி - மனித சமூகத்தை வழி காட்டிய இறையருள் பெற்ற தூதர்கள் தோன்றியுள்ளார்கள் எனநம்புகிருேம். அப்படித் தோன்றிய முதல் இறைதூதர் ஆதம் (அலை) என்றும் கடைசியாகவும், இறுதியாகவும் தோன்றியவர் முஹம்மது (ஸல்) என்றும் நாங்கள் நம்புகின்ருேம்.

எங்களுடைய நாட்டில் புத்த தர்மம் முறையாக நடத்தப்படுமாக இருந்தால் - இங்கு வாழ்கின்ற ஏனைய சமயத்தவர்கள், நிம்மதியாவும் சிறப்பாகவும் வாழ்வதற்குரிய நல்ல சூழ்நிலை உருவாக முடியும்.

குறிப்பாக, இலங்கையில் பல இலட்சக்கணக்கான மக்களைப் பாதித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மோசமான விடயம் மதுபானத்தைப் பயன்படுத்துவதாகும். வசதி படைத்தோர் அதனுல் பெரிதும் பாதிக்கப்படாவிட்டாலும்கூட, ஏழை எளிய மக்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாகி, மிகவும் கீழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். கௌதம புத்தர் இதனை தடைசெய்து இருக்கிருர். அந்த வகையில் இராஜங்க அமைச்சர், மதுபானத்தை பழக்கத்திலிருந்து குறைப்பதற்கு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில, முஸ்லிம்கள் மாமிச உணவு உட்கொள்ளும் விடயமாக அதாவது மிருகங்களை அறுப்பது சம்பந்தமாக - தப்பான அபிப்பிராயம் நிலவிக் கொண்டிருப்பதையிட்டு வேதனை அடைகிருேம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜீவகாருண்யத்தை மிக வன்மையாக வலியுருத்தியுள்ளார்கள்; அதுபற்றி எங்களுக்கு எடுத்துக்கூறியுள்ளார்கள்.

அதே வேளையில், தாகம் மேலிட்ட ஒரு நாய், ஒரு கிணற்றடியில் தண்ணீருக்காக ஏங்கி, நாக்கை நீட்டிக்கொண்டு தாகம் தீர்க்கக் காத்துக்கொண்டிருந்தபோது, அவ்வழியே வந்த ஒரு பெண் தன்னுடைய சேலைத்தலைப்பைக் கிணற்றினுள் விட்டு நனைத்து, அதை எடுத்து பிழிந்து தண்ணீரை எடுத்து தாகத்துடன் இருந்த அந்த நாயின் தாகத்தைத் தீர்த்ததன் காரணமாக அவள் சுவர்க்கம் போனதாகவும் எங்கள் நபி (ஸல்) எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல; குறிப்பாக மாடு ஒட்டகம், குதிரை போன்ற மிருகங்களைக் கொன்று அவற்றின் சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் பாரம் சுமக்க வைப்பதையோ, வேலை செய்வதையோ பெருமாஞர் (ஸல்) கண்டித்துள்ளார்கள்.

மாமிச உணவுப் பிரச்சினையை அமைச்சர் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த சபையில் உள்ளவர்களில் கூட 90 வீதமானர்கள் மாமிச உணவு சாப்பிடுபவர்கள் என நினைக்கிறேன். எமது நாட்டில் கூட 90 வீதமானவர்கள் மாமிச உணவு சாப்பிடுபவர்கள்.

போஷாக்கின்மை இன்று எங்கள் மத்தியில் நிலவுகிறது. இவ்வளவு மாமிச உணவு சேர்த்துக்கொண்டும் கூட இந்தநிலை. மாமிசம் தடை செய்ய முடியாத - அத்தியாவசியமான உணவாக இருக்கின்றபடியால், இஸ்லாமிய தர்மம் மிருகங்களை அறுப்பதில் கூட முஸ்லிம்களை வழிப்படுத்தியிருக்கிறது. அதாவது, ஒரு கோழியையோ, ஒரு மிருகத்தையோ அறுக்கும்போது மிகக் கூரான கத்தியினுல் - அவை சித்திரவதைப்படாத வகையில், ஆகக் குறைந்தவேதனையுடன் அறுக்கப்பட வேண்டும் என்றும், அவற்றின் இரத்தம்வெளியே செலுத்தப்பட்டு-அந்த இரத்தத்தை அருந்துவது எமது உடலுக்கு உவப்பானதல்ல என்பதனுல் அதனை அகற்றி - தூய்மையான இறைச்சியாக அது ஆக்கப்பட்டு, அதனை நாங்கள் உண்ண வேண்டுமென வழிப்பட்டிருக்கிருேம்.

மிருகங்கள் முஸ்லிம்களால் அறுக்கப்படுவதாலும், பெருந்தொகையானவர்கள் அந்த உணவை உண்பதைத்தவிர்க்க முடியாததாலும், மிருகங்கள் விடயத்தில மிக இரக்கமாகவும் அவற்றை அறுக்கும் விடயத்தில் நிதானமாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்று எங்களுக்கு வகுத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், இந்த நாட்டில் முஸ்லிம்கள் மிருகங்களை பக்குவமான முறையில் அறுக்கும் முயற்சியில் - தேவை கருதி ஈடுபட்டுள்ளனர். அதனைப்பற்றி தவருன அபிப்பிராயம் நாட்டுமக்கள் மத்தியில் நிலவக்கூடாது. மிருகங்கள் விடயத்தில் ஜீவகாருண்யம் இன்றி நடந்தால் நிச்சயமாக எங்கள் இறைவன் கண்டிப்பான், தண்டிப்பான் என்ற நம்பிக்கையுள்ளவர்கள்.

இவ்வாறு சகோ; அபூபக்கர் கூறினுர்.

---

### காரைதீவு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் கனவாய் போய்விட்டது. ஜனநாயகத்திற்கும் அதன் வழிமுறைகளும் திரும்பிவிட்டதாக கூறிக்கொள்ளும் தமிழ் போராளிக் குழுக்கள் ஆயுதங்களைக் கொண்டு முஸ்லிம் சமூகத்தைத் தொடர்ந்தும் அடக்கி ஆள முற்படுவதென்பது அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்டுள்ள இனவாத உணர்வில் இருந்து இன்னமும் விடுபட விரும்பவில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

முஸ்லிம் சமூகம் செவிடர்களாகவும், குருடர்களாகவும், ஊமைகளாகவும் இருக்கின்றனர் என்ற நினைவில் மாகாண அரசு செயல்படுமாக இருந்தால் -- முஸ்லிம்களின் விவகாரங்களை பிழையான முறையில் மாகாண அரசு அணுகுமாக இருந்தால் -- அது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

முஸ்லிம்களை மிகவும் புண்படுத்தியுள்ள காரைதீவு சம்பவம் பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன? என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளீர்கள் என்பவற்றை உடனடியாக பகிரங்கப்படுத்துமாறு உங்களை பணிவுடன் வேண்டுகின்றேன்.

ஒப்பம்:

ஏ. எல். ஏ. மஜீத்
வட-கிழக்கு
மாகாணசபை உறுப்பினர்

### முஸ்லிம்.....

(8ம்-பக்கத் தொடர்ச்சி)

யைக் கூட்டி வந்தவருக்குத் தான்ஊசிபோட்டு சிகிச்சை அளிக்கப்படுறது. இந்த நாட்டில் இனப் பிரச்சினை இவ்வாறுதான் அணுகப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிடப்பட்ட சதி முயற்சியொன்றே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் 33 / மாக இருந்த முஸ்லிம்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் இரவோடிரவாக 17%மாக குறைக்கப்பட்டுள்ளார்கள். ஆனுல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தயாரித்தவர்கள் முஸலிம்களை நட்டாற்றில் விட்டுவிட்டார்கள். ஒப்பந்தம் கைச்சாத்தாக முன்னர் எல்லாத் தமிழ்க்குழுக்களும் டில்லிக்கு அழைக்கப்பட்டு, அது பற்றி ஆலோசிக்கப்பட்டது. முஸ்லிம்களை கணக்கிலெடுக்கவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் முஸ்லிம்களின் நிலைமைபற்றி ஆராய்வதற்கு, முஸ்லிம் பிரதிநிதிகள்டில்லிக்கு அழைக்கப்படுவார்களென உறுதி கூறப்பட்டது. ஆனுல் அந்தஉறுதிமொழி பின்னர் மறுக்கப்பட்டது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் சக்தி கிழக்கில தான் உண்டு. கிழக்கில் மட்டும்தான் 33 /. முஸ்லிம்கள் வாழ்கின்ருர்கள். ஆனுல் ஒப்பந்தம் வடக்கு - கிழக்கை இணைத்ததன் மூலம் முஸ்லிம்களை 17·/. மாக்கி அரசியல அனுதைகளாக்கி விட்டது. மற்ற மாகாணங்களை பொறுத்த வரையில் கல்யாணம் கலந்து ஆலோசிக்கப்பட்ட ஒன்று. ஆனுல் வடகில் தானகவே இணைக்கப்பட்டது. இப்பொழுது விவாகரத்தா இல்லையா என்பது மட்டும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு தான் முஸ்லிம்களின் பெரருளாதாரம் திட்டமிட்ட முறையில் நிர்மூலமாக்கப் பட்டது. பல முஸ்லிம் புத்திஜீவிகள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்காஞேர் அகதிகளாகினர். இன்றும் கூட நூற்றுக்கணக்கான முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் மதுரங்குளியில் வாழ்கின்றனர். குடிப்பதற்குக் கூட உப்பு நீரையே பாவிக்கவேண்டிய துர்பாக்கியநிலை.

நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்காகதாஞ எங்களுக்கு இந்த தொல்லைகள? எங்களுக்கான உரிமைகளை பேசுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா? எங்களது மத. கலாச்சாரத்தைப் பின்பற்றுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா? எங்களுக்கு ஏன் இந்த அச்சுறுத்தல்? நாம் செய்த தவறுதான் என்ன? எங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி அரசைக் கேட்டோம், மறுக்கப்பட்டது. கிழக்கில் சிங்கள மக்களை பாதுகாக்க விசேட நடவடிக்கைகைகளை மேற்கொண்ட அரசு, முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கு ஊர்காவல் படையைக்கூட அமைத்துத்தரத்தயங்கியது; அதுதேவையில்லை என்று கூறப்பட்டது. வயல் அழிவைத்தடுக்கத் தந்த, நாட்டுத்துவக்குக்கூட திருப்பி எடுக்கப்பட்டது. எங்களைப் பாதுகாக்க பாண் வெட்டும் கத்திகூட எங்களிடம் இருக்கவில்லை. இது தான் கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் நிலை.

இன்று காலை திரு. மாவை சேனதிராசா தனது பேச்சின்போது எங்களை ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்று குறிப்பிட்டார். அப்படி அழைப்பது தவறு. நாங்கள் தமிழர்கள் அல்ல. முஸ்லிம்கள். தனித்துவமான சமூகத்தினர். நாங்கள் தமிழ் பேசுவதால்- அது எம்மை அடக்கி ஆள உரிமை வழங்கி விட முடியாது.

முஸ்லிம்களை ஒரு தனித்துவமான சமூகமாக ஏற்றுக்கொள்ள தமிழ் இயக்கங்கள் இருக்கின்றன. ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்றே எங்களை புலிகள் தங்களது புத்தகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர். அதனை தான் ஆட்சேபிக்கிறேன். இஸ்லாமியத்தமிழர் என அழைத்தால் எம்மிடம் நேச உறவை எதிர் பார்க்க முடியாது. ''முஸ்லிம்கள்'' என்ற தனித்துவமான பிரிவினர் என எம்மை அங்கீகரித்தால மாத்திரமே நேசத்தை எம்மிடம் எதிர் பார்க்கலாம்.

முஸ்லிம்கள் தனியான ஓர் சமூகம் என்பதை பிரித்தானியர்களே ஏற்று அங்கீகரித்து - முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவத்தை நூறுவருடங்களுக்கு முன்பு சட்டசபையில் மர்ஹூம் எம். சி. அப்துல் ரஹ்மான் மூலமாக வழங்கியிருந்ததை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

முஸ்லிம்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் வழங்கத் தேவையில்லை அவர்களும் தமிழர்களே. தமிழைத் தான் பேசுகிருர்கள் என்று, சேர் பொன்; இராமநாதன் வாதிட்ட போது, முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான அப்துல்காதர் அதை எதிர்த்தார். அவரின் மகன் இராஜாங்க அமைச்சர் ஜாபிர் ஏ காதரும் இச்சபையில் இருக்கிருர்.

பொலிஸ் ஆணைக்குழுவின் சட்டத்தின் பின்னுல் உள்ள கோட்பாட்டை நான் ஆதரிக்கிறேன். ஆனுல் சட்ட மூலத்தின் உள்ளடக்கத்தை நான் ஆதரிக்கவில்லை. பொலிஸ் ஆணைக்குழு பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கப் போவதில்லை. ஆயிரக்கணக்கான பொலிஸாரை நியமிப்பதால் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. அதே வேளையில், அந்தப்பிரதேசப் பொலிஸார் அந்தப் பிரதேச மக்களின் விருப்பத்தின் பேரிலேயே நியமிக்கப்படவேண்டும்.

இவ்வாறு சகோ: அஷ்ரஃப் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களின் தனித்துவத்தைக் காக்க-பிரச்சினையைத் தீர்க்க

# முஸ்லிம் மாகாண சபையே மார்க்கம்!

## பாராளுமன்றத்தில் தலைவர் அஷ்ரஃப் வலியுறுத்து

வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமாக நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பில் எந்தத் தரப்பினரது வெற்றியைத்தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். சர்வஜன வாக்கெடுப்பை இப்போதைய சூழ்நிலையில் நடத்துவதானால் முஸ்லிம்கள் தான் படுவதைக்குள்ளாவார்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம்.பி. யுமான சகோ. எம். எச். எம். அஷ்ரஃப் பாரளுமன்றத்தில் கூறினார்.

பொலிஸ் ஆணைக்குழு சட்டவிவாதத்தில் கடந்த 9-12-89 திகதியன்று சகோ. அஷ்ரஃப் இதனைத் தெரிதெரிவித்தார்.

யற்றவர்களாயுள்ளனர். இலங்கை ஒரு நாடு என்பதை தீர்மானிப்பது கூட இன்று முஸ்லிம்கள் - கிழக்கு முஸ்லிம்களின் கையில்தான் உள்ளது.

சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் முஸ்லிம்கள் அழிக்கப்படுவார்கள். ஆயிரக்கணக்கில் கொல்லப்படுவார்கள். பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் இணைப்பு தோல்வி கண்டால் நிலைமை எப்படி இருக்கும். அதன் பின் முஸ்லிம்களுக்கு அங்கு வாழலாமா? இணைப்பு வெற்றி பெற்றால் நிலைமை எப்படியிருக்கும். சிங்கள மக்கள் மத்தியில் தவறான பிரசாரம் செய்யப்பட்டு முஸ்லிம்களால் தான் இணைப்பு வெற்று பெற்றது என்

★ ஒரு நோயாளி வைத்தியரிடம் செல்கையில், அந்த நோயாளிக்குத்தான் சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால் நமது நாட்டில் நோயாளியைக் கூட்டிவந்தவருக்குத்தான் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த நாட்டில் இனப் பிரச்சினை இவ்வாறுதான் அணுகப்படுகிறது.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணத் தவறுவது பெரும் ஆபத்தானது. ஜே. வி. பி. அச்சுறுத்தலைவிட அது பயங்கரமானது. ஜே. வி. பி. அச்சுறுத்தலினால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை. ஆனால் இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிடின் இந்த நாடு பிரியும் ஆபத்திருக்கின்றது. இதனை உணர்ந்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண சர்வகட்சி மாநாட்டினை மீண்டும் கூட்ட வேண்டும். கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அதில் இணைப்புக்கு எதிராக வெற்றி கிடைக்குமானால் அதனைத் தொலைக் காட்சியில் அறிவிக்கும் போது அழகாகத்தான் இருக்கும். ஆனால் எத்தனை ஆயிரம் முஸ்லிம்களின் சடலங்களின் மீதாகச் சென்று அந்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டியிருக்கும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இணைப்பு முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தினை அதன் அடையாளத்தினைப் பாதிப்பதாகவே அமையும்.

னால் வடக்கு கிழக்குச்கு வெளியே வாழும் முஸ்லிம்களது நிலைமை எப்படி இருக்கும்.

சிங்கள பகுதிகளில் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அந்த ஒற்றுமையை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு தொடர வேண்டும். அதுதான் என் விருப்பமாகும்.

1983ல் தமிழர்களைக் கொன்றது சிங்களவர்கள் என நான் கூறமாட்டேன். தமிழர்களை பாதுகாத்ததும் சிங்களவர்களே. ஆனால் 99 நல்லவர்கள் இருந்தாலும் ஒரு கெட்டவன் இருந்தால் நிலைமையென்ன?

முஸ்லிம்கள் சகல தமிழ்க் குழுக்களதும் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளார்கள். ஆனால் நாம் தமிழ் சமூகத்தினை வெறுக்கவில்லை. நாம் அவர்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களும் சிறுபான்மை சிங்களவர்களும் தமிழர்கள் மத்தியில் வாழவேண்டும். இது யதார்த்த நிலை. இதற்

★ முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களை இணைத்து மு. மாகாணசபை அமைய வேண்டும். அல்லது சுவிற்சர்லாந்தில் உள்ள 'கான்ரோன்' முறை போன்று இங்கு அமைப்பது பற்றி ஆராய வேண்டும். அல்லது இதற்குப் பொருத்தமான வேறு எந்த முறை பற்றியாவது ஆராயப்பட வேண்டும்.

சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பினை நடத்துங்கள் என்று இச்சபை உறுப்பினர்கள் கூறுகிறார்கள். இதனால் முஸ்லிம்கள் அழிக்கப்படுவார்கள். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இன்று காலை கூட பன்னிரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்களுடைய கருத்து பெறப்பட்வில்லை. கிழக்கு மாகாணத்தில் மட்டுமே 33% முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். ஏனைய இடங்களில் பரந்தே வாழ்கின்றார்கள். கடலில் வீசிய உப்பைப்போன்று அரசியல் சக்தி

கான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும்.

சமூக ரீதியான அதிகாரப் பரவல்கல் என்பது இலங்கைக்கு புதிய தொன்றல்ல.சோல்பரி ஆணைக்குழு, டொனமூர் ஆணைக்குழு அறிக்கைகளைப்பார்த்தால் இதுபுரியும். சமூக ரீதியான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் பல உறுப்பினர்களைக் கொண்ட தொகுதிகள் உருவாக்கப்பட்டன. கொழும்பு மத்தி, பேருவளை, மட்டக்களப்பு, மூதூர், அக்குரணை போன்ற பல உறுப்பினர் தொகுதி உருவாக்கப்பட்டதற்கு காரணமே, முஸ்லிம் மக்களுக்கு

பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே.

பொத்துவில் இரண்டு உறுப்பினர்களுக்கான தொகுதியாக்கப்பட்ட பின்னர்தான் அம்பாறை மாவட்டத்திலே முதல் தடவையாக 1977ல் தமிழ் உறுப்பினர் தெரிவாகும் நிலை உருவானது. முஸ்லிம்கள் தங்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்குத்தான் புத்தளம் தொகுதி உருவாக்கப்பட்டது.

ஒரே நிலத் தொடர்ச்சியாக இல்லாத பிரதேசங்களை ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் முறை இலங்கையில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வசிக்கின்ற சிங்கள சிறுபான்மை மக்களான உதவி அரசாங்கப் பிரிவு இவ்வாறுதான் அமைக்கப்பட்டது.

இந்தியாவிலே பாண்டிச்சேரி இவ்வாறு தான் நிலத்தொடர்ச்சியாக இல்லாத பிரதேசங்களை உள்ளடக்கிய மாநிலமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே வட கிழக்கிலுள்ள முஸ்லிம்களைக் கருத்தில் கொண்டு- அவர்களுக்கான ஒரு தனியான மாகாணசபை அமைக்க வேண்டும். வட-கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களை உள்ளடக்கி - அவர்கள்

பரவலாக்கல் மூலமே- அது அப்பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு சமூகத்தையும் நேரடியாகச் சென்றடைவதன் மூலமே அப்பகுதியில் சமூக ஒற்றுமையும், நிலையான நிம்மதியையும் உருவாக்க முடியும்.

அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றிப் பேசுகையில், அதனை ஆழமாக



ஆராய்து பார்க்கப் பொறுமையுமில்லை; விருப்பமுமில்லை. பிராந்தியங்களுக்கு அதிகாரம் அவசியம். பிராந்தியங்களிலுள்ள சிறுபான்மையினருக்கும் அரசியல் அதிகாரத்தை கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவை மீண்டும் சிறுபான்மையனராகிவிடும் எல்லா நாட்டு அனுபவங்களும் இதனைத்தான் கூறுகின்றன. உரிமைகள் தேனீரைக் குடித்துவிட்டுப் பெற்றதாகச் சரித்திரம் இல்லை. அது போராட்ட வடி

★ இஸ்லாமியத் தமிழர் என எம்மை அழைத்தால் எம்மிடம் நேச உறவை எதிர்பார்க்க முடியாது. முஸ்லிம்கள் தனித்துவமான பிரிவினர் என எம்மை அங்கீகரித்தால் மட்டுமே எம்மிடம் நேசத்தை எதிர்பார்க்கலாம்.

நிலத்தொடர்பற்ற முறையில் இருந்தாலும் - அரசியல் இணைப்பு மூலம் தொடர்புள்ள வகையில் இம்மாகாணசபை அமைய வேண்டும். அம்பாறை மாவட்டத்தில்தான் முஸ்லிம்கள் மிகப்பெரும் பான்மையாக வாழ்கின்றபடியால் - 960 சதுர மைல்களைக்கொண் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறைப் பிரதேசங்களை மையமாக வைத்து - வடக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களை இணைத்து இம்மாகாணசபை அமைய வேண்டும்.

அல்லது, சுவிஸ்சர்லாந்தில் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுகின்ற 'கன்ரோன்' முறை போன்ற ஒன்றை இங்கு அமைப்பதுபற்றி ஆராயவேண்டும். அல்லது இதற்குப் பொருத்தமான வேறு எந்த முறை பற்றியாவது ஆராயப்பட வேண்டும்.

வமாகத்தான் பெறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேர்மையான வழியிலேயே முஸ்லிம்களுக்கான உரிமைகளைக் கேட்கிறது. வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துக்குழுக்கள் உட்பட எல்லா அரசியல் கட்சிகளையும் வேண்டுகிறோம்; எங்கள் பிரச்சினையை கேளுங்கள்; கவனியுங்கள். இது தான் இறுதி நேரம். அடுத்த தேர்தலைப்பற்றிச் சிந்திக்காமல் சரியான அரசியல் தீர்வுக்கு நாம் உடனடியாக வரவேண்டும். அதற்கான பேச்சுவார்த்தை உடன் நல்ல மனதுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசுடனான பேச்சுவார்த்தையின்போது இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு மாகாணசபை கொடுப்பதைப் பற்றி எண்ணவில்லை அப்பகுதியிலுள்ள மக்கள் அதனை கேட்கவுமில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ; தமிழர்களுக்கு விசேடமாக இல்லை. அவர்களுக்கு கொடுத்

★ நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்காகத்தானா எங்களுக்கு இந்தத் தொல்லைகள்? எமது உரிமைகளைப் பேச எமக்கு உரிமையில்லையா? எமது தனித்துவத்தைப் பாதுகாக்க எமக்கு உரிமையில்லையா? எங்களுக்கு ஏன் இந்த அச்சுறுத்தல்? நாம் செய்த தவறுதான் என்ன?

அந்த அந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஒவ்வொரு இனத்தையும் இன்னொரு இனம் அதிகாரம் செலுத்தி அடக்கியாளாத ஒரு முறை மூலமே- வட-கிழக்கில் வாழ்கின்ற சகல இனங்களாலும் திருப்திப்படக்கூடிய சரியான அதிகாரப்

தையே சிங்களவர்களுக்கும் கொடுத்ததாகச் சொன்னார்.

ஒரு நோயாளி வைத்தியரிடம் செல்கையில், அந்த நோயாளிக்குத்தான் சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால் நமது நாட்டில் நோயாளி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோக பூர்வ இதழ்

கொழும்பு 12ல் உள்ள I. C. C. Co.யில் அச்சிடப்பட்டு கொழும்பு 12, ... வீதி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org